விலை: 50.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 12

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 302 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 30 திங்கட்கிழமை (17.10.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## பிரதமராக மகிந்த; பெரமுனவுக்குள் பேச்சு

### தினேஸ் குணவர்தன இணக்கம்?

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதியும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமர் பதவிக்கு நியமிப்பது சம்பந்தமாக பொது ஜன பெரமுனவுக்குள் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**



ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோஹித்த அபேகுணவர்தன, நாமல் ராஜபக்ஷ ஆகியோர் தலைமையில் இந்த பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் ஏற்கனவே பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக கூறப்படுகிறது.

தினேஷ் குணவர்தன தனது பிரதமர் பதவியை மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்க விருப்பம் தெரிவித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே அடுத்த அதிபர் தேர்தலில் நாமல் ராஜபக்ஷவை வேட்பாளராக நிறுத்தும் அரசியல் திட்டத்துடன் மகிந்த ராஜபக்ஷவை முன்னிறுத்தி பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுவதாக கூறப்படுகிறது.

கடந்த காலங்களில் என்ன நடந்திருந்தாலும் தற் 11

## தொடர் காய்ச்சல் 8 மாதக் குழந்தை யாழில் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

7 நாட்கள் தொடர் காய்ச்சலுடன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 8 மாத குழந்தை உயிரிழந்துள்ளது.

கிளிநொச்சி - கணேசபுரத்தைசேர்ந்த பிள்ளைக்கு கடந்த 7 நாட்களாக காய்ச்சலுடன் சளிகாணப்பட்டதால் கடந்த 14 ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் 11

## நாவலப்பிட்டியில் மகிந்தவை எதிர்த்து போராட்டம்

### பலர் கைது

08 ஆம் பக்கம் பார்க்க

## வன்முறையில் ஈடுபட்ட 10 பேர் மறியலில்

(கரணவாய்)

நீதிமன்ற எச்சரிக்கையினையும் மீறி வன்முறையில் ஈடுபட்ட 10 பேரை 14 நாட்கள் விளக்கம 11

## வடக்கு மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் விரைவில் தீர்வு

### ஆளுநர் ஜீவன் தியாகராஜா உறுதி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கடற்றொழிலாளர்கள் தமக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் வடமாக ஆளுநர் ஜீவன் தியாகராஜாவை zoom செயலி ஊடாக நேற்று முன்தினம் சனிக்கிழமை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

குறித்த காலந்துரையாடலில் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத்தின் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா கூறுகையில் சட்ட விரோத சுருக்கு வலைத் தொழி 11

## வட்டுக்கோட்டையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வட்டுக்கோட்டை சங்கரத்தைப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

2 பிள்ளைகளின் தந்தையான 42 வயதுடை 11

## மூதாட்டியை தாக்கிவிட்டு 10½ பவுண் நகை, பணம் கொள்ளை!

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை-ஐயா கடைச் சந்திப் பகுதியைச் சேர்ந்த வீடொன்றில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வேளையில் வீட்டில் தனித்திருந்த மூதாட் 11

## இலங்கை மீனவர் ஐவர் இந்தியாவில் கைது

(கொழும்பு)

எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இலங்கை கடற்றொழிலாளர்கள், 5 பேரை இந்திய கடற் 11

## வல்லைச் சந்தியில் வழிப்பறிக் கொள்ளை

- 10 பவுண் தாலி அபகரிப்பு
- ஒரு வாரத்திற்குள் 4 சம்பவங்கள்

(கரணவாய்)

அச்சுவேலி வல்லைச் சந்தி பகுதியில் நேற்று மதியம் துணிகரமான வழிப்பறிக் கொள்ளை சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் 10 பவுண் தாலி கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது. 11


## சீரற்ற காலநிலை பாதிக்கப்பட்டோர் தொகை அதிகரிப்பு

### நிவாரணங்களுக்கு ஏற்பாடு

(கொழும்பு)

சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணிகளை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஒத்துழைப்புடன் துரிதமாக ஒருங்கிணைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிர 11

## போதை மாத்திரைகளுடன் நேற்றும் இருவர் கைது



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுன்னாகம் தெற்கு மற்றும் கோப்பாய் தெற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சந்தேகநபர்கள் இருவர் 100 போதை மாத் 11

## ஐஸ் போதையுடன் யாழில் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொம்மை வெளியில் ஐஸ் போதைப் பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையின் போதே குறித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் பொது அதே இடத்தைச் சேர்ந்த 26. 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மு/விசுவநாதர் ஆரம்பப்பாடசாலை

## விசுவமடு முல்லைத்தீவு.

### தரம் - 05 புலமைசார் பரீட்சையில் சிகரம் தொட்ட சிறு தளிர்களின் மேன்மையைப் போற்றுகின்றோம் - 2021


திரு. து.யோகராசா
(முதல்வர்)


திருமதி தெ.வீரசிங்கம்
(பிரதி முதல்வர் - ஓய்வு)


திருமதி பு.பகிரதன்
(பிரதி முதல்வர்)


திரு. க.கவாஸ்கர்
(தரம் 5 பொறுப்பாசிரியர்)


திருமதி. ச.சத்தியேஸ்வரன்
(வகுப்பாசிரியர்)


திருமதி. யோ.விஜயதீபன்
(வகுப்பாசிரியர்)


உ.கவிஷன் (புள்ளி 189)
மாவட்ட நிலை - 01


க.பிபிசா
(புள்ளி 179)


பு.பபித்திரன்
(புள்ளி 176)


நி.அஜய்
(புள்ளி 176)


வி.தர்மிகா
(புள்ளி 173)


கி.தஷ்விதன்
(புள்ளி 171)


சு.சுபோதினி
(புள்ளி 170)


பி.அக்ஷயா
(புள்ளி 167)


செ.கம்சிகன்
(புள்ளி 167)


வ.பவிசனா
(புள்ளி 167)


க.கிஷானா
(புள்ளி 166)


ச.ஆர்னிகா
(புள்ளி 164)


ந.திஷாகினி
(புள்ளி 164)


க.சாகித்யா
(புள்ளி 163)


க.மிதுர்ஷன்
(புள்ளி 162)


கோ.தனுஸ்கா
(புள்ளி 161)


பு.தனுசாந்
(புள்ளி 160)


ஜெ.ஜெனிஸ்ரன்
(புள்ளி 160)


கு.ஜெதுசாளினி
(புள்ளி 158)


கை.குபேரன்
(புள்ளி 156)


வி.பிருந்துஷா
(புள்ளி 156)


ஜெ.சுலோஜன்
(புள்ளி 154)


ரா.பிறிஸ்சில்லா
(புள்ளி 154)


நா.வைஸ்நவி
(புள்ளி 152)


றொ.சாஜித்தன்
(புள்ளி 152)


ஸ்.கம்சிகா
(புள்ளி 148)


சி.சோபினா
(புள்ளி 148)


எமது மாணவர்களையும் மாணவர்களுக்கு அறிவூட்டிய அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள்
அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்

Congratulations

(C-5101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசிற்கு எதிராக கனடாவில் ஆர்ப்பாட்டம்

(ஒட்டாவா)

**அடக்குமுறையை நிறுத்து, மக்களின் எதிர்பார்ப்பிற்கு எதிரான பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் என கனடாவின் ஒட்டாவா பாராளுமன்றத்திற்கு முன்பாக இலங்கையர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**






நேற்று நடைபெற்ற குறித்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கையர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதில் ராஜபக்ஷர்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக அவர்களின் உருவப் படங்களையும் ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். (நி)

## இனந்தெரியாதவர்களின் தாக்குதலால் கைதடியில் ஒருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி தெற்குப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் நபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கைதடி தெற்குப் பகுதியில் உள்ள வீடொன்றிற்குள் நுழைந்த நபர்கள் இரும்பினால் ஆன கூர்மையான ஆயுதத்தால் வீட்டில் இருந்தவரை தாக்கியதில் 36 வயதான தி.ராதாரவி என்பவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

குறித்த வன்முறைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளனர். (நி-30)

## கோண்டாவில் பகுதியில் இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி தமிழர்களின் நினைவு தினம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கோண்டாவில் பகுதியில் 1987 ஆம் ஆண்டு இந்திய அமைதி காக்கும் படையினரால் படுகொலை செய்யப்பட்ட பொது மக்களின் நினைவேந்தல் நிகழ்வு நேற்று காலை இடம்பெற்றது.

யாழ்.கோண்டாவில் கலைவானி வீதிப் பகுதியிலுள்ள அமைந்துள்ள நினைவுத் தூபியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாகச் சுடரேற்றி, மலர்தூவி அஞ்சலி செய்யப்பட்டது.

1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அடுத்து இந்திய அமைதி காக்கும் படை என்ற பெயரில் இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதிகளை ஆக்கிரமித்த இந்தியப் படையினர் விடுதலைப் புலிகளுடன் பல சண்டைக் களங்களைத் திறந்த அதே சமயத்தில் நூற்றுக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களை ஈவிரக்கமின்றிக் கொன்று குவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## நம்பிக்கையை கட்டியெழுப்பவே புலம்பெயர் அமைப்புகளுடன் பேச்சு

### நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ

(கொழும்பு)

அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை புலம்பெயர் அமைப்புக்களுக்கு வலுவாக கட்டியெழுப்புவதற்காகவே பேச்சுக்கள் முன்னெடுக்கப்படுவதாக அமைச்சர் கலாநிதி. விஜயதாசராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம், புலம்பெயர் தேசங்களில் உள்ள தமிழ் அமைப்புக்களுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகிறது.

அதேநேரம் குறித்த கலந்துரையாடல்கள் மெய்நிகர் வழியில் முன்னெடுக்கப்படுகின்றன. அவை தனியாகவும் குழுவாகவும் இடம்பெறுகின்றன.

பிரித்தானியா, நோர்வே, அவுஸ்திரேலியா, கனடா உள்ளிட்ட பல நாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழர்கள் கலந்துரையாடல்களில் பங்கேற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சிறுவர், முதியோர், ஆசிரியர் தின விழா-2022

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலைய முதியோர், ஆசிரியர், சிறுவர் தின விழா 2022 நிகழ்வானது நாளை மாலை 2.30 மணிக்கு காந்திஜி சனசமூக நிலைய வளாகத்தில் தலைவர். தே. நமனதாசன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக யாழ். மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (நி)

## இருபாலையின் சில பகுதிகளுக்கு வலி. கிழக்கு பதில் தவிசாளர் விஜயம்



(யாழ்ப்பாணம்)

இருபாலை தெற்கு கிழக்கு பகுதிக்கு திடீர் கள விஜயம் ஒன்றை நேற்று முன்தினம் வலி. கிழக்கு பிரதேச சபை பதில் தவிசாளர் ம.கபிலன் மேற்கொண்டார்.

குறித்த விஜயத்தின் போது இருபாலை தெற்கு கிழக்கு பகுதியிலுள்ள வீதி புனரமைப்பு, வாய்க்காலில் தேங்கி நிற்கும் வெள்ள மழை நீர் ஓடுவதற்கு ஏதுவாக வாய்க்காலை சீர் செய்தல், குள புனரமைப்பு, பிரதேச சபையால் வீதிகளுக்கு பொருத்தப்பட்ட மின் விளக்குகள் பழுது பார்த்தல் போன்ற விடயங்களை பார்வையிட்டார். (நி)

## போதைப்பொருள் விற்றவர் கைது

(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கானை பகுதியில் உள்ள கடை ஒன்றில் சாதா போதைவஸ்து விற்பனை செய்த குற்றச்சாட்டின் கீழ் சந்தேகநபர் ஒருவரை மானிப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், சங்கானை சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு அண்மையில் உள்ள கடை ஒன்றில் சாதா போதைவஸ்து விற்பனை செய்வதாக மானிப்பாய் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

அதனையடுத்து மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்ட அதிரடி சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-104)

## 210 லீற்றர் கோடாவுடன் ஒருவர் கைது

(அராலி)

கோப்பாய் பகுதியில் 210 லீற்றர் கோடாவுடன் 29 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சுற்றிவளைப்பினை மேற்கொண்ட கோப்பாய் பொலிஸார் குறித்த சந்தேக நபரை கோடாவுடன் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரிடம் மேலதிக விசாரணையின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (நி-104)

## சீரணி அம்மன் ஆலயத்தில் பெண்ணின் கைப்பை திருட்டு

(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சண்டிலிப்பாய் - சீரணி அம்மன் ஆலயத்தினை தரிசிக்க வந்த பெண்ணின் கைப்பை களவாடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், கடந்த வெள்ளிக்கிழமை குறித்த ஆலயத்தை தரிசிக்க வந்த பெண், மோட்டார் சைக்கிளில் தனது கைப்பையினை வைத்துவிட்டு ஆலயத்தினை தரிசித்துவிட்டு திரும்பி வந்து பார்த்தவேளை கைப்பை களவாடப்பட்டிருந்தது.

இச்சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழா வாழ்த்து

**திருமதி சோமகலா திருஞானமூர்த்தி**
(பயிற்றப்பட்ட மனைப் பொருளியல் S.L.T. S.I)

எமது பாடசாலையில் மகத்துவமான
சேவையாற்றி ஓய்வுபெறும் சிரேஷ்ட
ஆசிரியர் **திருமதி சோமகலா திருஞானமூர்த்தி**
அவர்களுக்கு மணிவிழா வாழ்த்தினைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஓய்வுக்காலம் மகிழ்ச்சியாகவும் சிறப்பாகவும்
அமைய வாழ்த்துகின்றோம்.

சேவை விபரம்
மு/ முல்லைத்தீவு றோ.க.வித்தியாலயம்
(01.08.1985 - 09.02.1988)
யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
(10.02.1988 - 31.12.1989)
மு/புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலயம்
(01.01.1990 - 10.03.1991)
யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
(11.03.1991 - 22.06.2002)
யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
(23.05.2002 - 23.02.2011)
யா/ கோண்டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியாலயம்
(24.02.2011 - 15.10.2022) (இன்றுவரை)

**ஆசிரியர் நலன்புரிக்கழகம் - யா / கோண்டாவில் இராமகிருஸ்ணா மகா வித்தியாலயம்** (C-5103)


# 55 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணியை வீழ்த்தியது நமீபியா



இருபது-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் முதல் சுற்றுப்போட்டியில் இலங்கை அணியை 55 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி நமீபியா அணி வெற்றி பெற்றுள்ளது.

போட்டியில் நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் நமீபியா அணியையே துடுப்பெடுத்தாட அழைத்தது.

அதன்படி முதலில் களமிறங்கிய நமீபியா அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 163 ஓட்டங்களை பெற்றுக கொண்டது.

இதனை அடுத்து 164 என்ற வெற்றி இலக்கோடு களமிறங்கிய இலங்கை அணி 19 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 108 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. (நி)


## வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய நகரங்களுக்கு அண்மையில் அலுவலகம் நடத்துவதற்கு வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. (13449)

தொடர்பு:- 077 725 5505
077 722 6035 (Whatsapp/Viber)


# மகளிருக்கான இருபது - 20
## ஆசியக் கிண்ணம் இந்தியா வசமாகியது




மகளிருக்கான இருபது-20 ஆசியக் கிண்ணம் இந்தியா வசமானது.

இலங்கைக்கு எதிராக நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் இந்தியா 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை மகளிர் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 9 விக் கெட்டுகளை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய மகளிர் அணி 8.3 ஓவர்களில் 2 விக் கெட்டுகளை மாத்திரம் இழந்து 71 ஓட்டங்களைப் பெற்று கிண்ணத்தைச் சுவீகரித்தது. (நி)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.
**சிவசுப்பிரமணியம் செந்தில்குமரன்**
யா/திருநெல்வேலி
றோ.க.த.க.பாடசாலை

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் பிரதி அதிபர்களாக கடமையாற்றி அதிபர் சேவைக்காக பதவி உயர்வு பெற்றுச் சென்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி **கவின்ஜா நவஜீவா**
யா/கொக்குவில் இந்து
ஆரம்ப பாடசாலை

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி


# மரண அறிவித்தல்



## கார்த்திகேசு புஸ்பவதி

புங்குடுதீவு 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 3ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு புஸ்பவதி அவர்கள் நேற்று (16.10.2022) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (கணக்கர்) - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கார்த்திகேசு அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகபூசணி, சரஸ்வதி, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கண்மணி, சின்னம்மா, பொன்னம்மா, கண்ணம்மா, கந்தையா, தம்பையா, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும் வசந்தா, வரதா, வாணி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீஸ்காந்தன் (சிறிகடை), அவர்களின் அன்பு மாமியாரும் ஷாளினி (தொண்டர் ஆசிரியை - திருநாவுக்கரசு முன்பள்ளி ), ஷாரங்கன் (ESoft Metro Campas - உதவி முகாமையாளர்), உருத்திரா கண்ணா (மனோன்மணி ரவல்ஸ்-776) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஷஸ்வினி, ஸ்ரீவர்னி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.10.2022) பிற்பகல் 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மணற்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

3ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(C-5104)

தகவல் :-
குடும்பத்தினர் (சிறிகடை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாதனப் பொருட்களின் விலை நாட்டில் சடுதியாக அதிகரிப்பு

## வியாபாரிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

**பெறுமதி சேர் வரி 15% மாக அதிகரிக்கப்பட்டமை மற்றும் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் ஆகியவற்றால் மின் சாதனங்களின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.**

முன்னர் 3800 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட 100 மீற்றர் கபில மற்றும் நீல நிற கம்பியின் ஓர் உருளை தற்போது 7600 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது.

பச்சை நிறத்திலான ஓர் உருளைக் கம்பியின் விலை 7600 ரூபாயில்இருந்து 19,000 ரூபாவாக உயர்ந்துள்ளது.

சராசரியாக 70 ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு மின்குமிழ் தற்போது 200 ரூபாவாக உயர்ந்துள்ளது. அதேசமயம் ஐந்து வாட் எல்.இ.டி வகை மின்குமிழ் ஒன்று தற்போது 650 ரூபாவாக உள்ளதாக விநியோகஸ்தர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதேபோன்று, பிரதான மின்சுற்றுடன் இணைக்கப்பட்டுள்ள தடையிகளின் விலையும் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது.

அந்த உதிரிப்பாகங்கள் பொருத்தப்பட்டுள்ள பிரதான மின்சுற்றுத் தாங்கிகள் முன்பு சுமார் 700 ரூபாய்க்கு விற்கப்பட்டாலும் தற்போது 1300 ரூபாய்க்கு மேல் விற்கப்படும் சந்தர்ப்பங்களும் உள்ளன. (நி)

# வாக்கெடுப்பிற்கு வருகின்றது 22 ஆவது திருத்தம்

(கொழும்பு)

மூன்றில் இரண்டு பெரும்பான்மை காட்டுவதில் சந்தேகம் இருந்தாலும் இந்த வாரம் 22 ஆவது திருத்தச் சட்டமூலம் மீதான பாராளுமன்ற விவாதம் மற்றும் வாக்கெடுப்பை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஆளும்கட்சி உறுப்பினர்களின் ஆட்சேபனையை கருத்திற்கொள்ளாமல் முன்மொழியப்பட்ட 22 ஆவது திருத்தத்தை முன்னெடுத்துச் சென்று வாக்கெடுப்புக்குச் செல்ல அமைச்சரவை கடந்த வாரம் அனுமதி வழங்கியதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதன்படி, 22 ஆவது திருத்தச் சட்டமூலம் எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை விவாதத்துக்கும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வாக்கெடுப்புக்கும் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

எவ்வாறாயினும் அரசியல் சீர்திருத்தங்களுக்கு யார் எதிர்ப்பை தெரிவிக்கின்றார்கள் என்பதை வாக்கெடுப்பின் மூலம் பொதுமக்கள் வெளிப்படையாக அறிந்து கொள்ளலாம் என்றும் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார். (நி)

# டொனால்ட் லூ இலங்கை விஜயம்

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பணியகத்தின் உதவிச்செயலாளர் டொனால்ட் லூ எதிர்வரும் வாரத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அரச உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் எதிர்க்கட்சி பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளார்.

மேலும் அவரது விஜயத்தின் போது மனித உரிமைகள், வர்த்தகம் மற்றும் முதலீடு ஆகிய விடயங்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# இலங்கை பெற்றுக் கொண்ட கடனை திருப்பிக் கோரும் பங்களாதேஷ்




(கொழும்பு)

இலங்கை பெற்றுக்கொண்ட கடன் தொகையை பங்களாதேஷ் மீள அடைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் ஆண்டு மார்ச் மாதம் இலங்கை பங்களாதேஷிடம் பெற்றுக்கொண்ட 200 மில்லியன் டொலர் கடனை திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது.

உரிய காலத்தில் இலங்கை கடனைத் திரும்பிச் செலுத்தும் என எதிர்பார்ப்பதாக பங்களாதேஷ் அரசாங்கம் தெரிவித்துள்ளது. சர்வதேச நாணய நிதிய ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் போது இலங்கை மற்றும் பங்களாதேஷ் மத்திய வங்கி ஆளுநர்கள் சந்தித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் பங்களாதேஷ் மத்திய வங்கி ஆளுநர் அப்துர் ரவூப் தலுந்தர் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடி காரணமாக பெற்றுக் கொண்ட கடனை உரிய காலத்தில் செலுத்த முடியாதுள்ளதால் இரண்டு தடவைகள் தவணை வழங்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

200 மில்லியன் டொலர் கடன் தொகையை உரிய காலத்தில் செலுத்தி முடிப்பதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க உறுதியளித்தார் என பங்களாதேஷ் மத்திய வங்கி ஆளுநர் தலுந்தர் தெரிவித்துள்ளார். (நி)

# அதிகரித்த வாழ்க்கைச் செலவால் கிராமங்களை நாடும் மக்கள்

(கொழும்பு)

கொழும்பு நகரம் உள்ளிட்ட பிரதேசங்களில் வாழும் மக்கள். கிராமப்புறங்களுக்கு இடம் பெயர்வதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு நகரம் உள்ளிட்ட பிரதேசங்களில் வாழ்க்கைச் செலவு அதிகமாக இருப்பதாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலானோர் கொழும்பில் உள்ள நகர்ப்புற அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வசிப்பவர்களாவர். அவர்கள் சந்தையில் இருந்து எல்லாவற்றையும் வாங்க வேண்டியிருப்பதால், நாட்டின் பணத் தேவையை அவர்கள் அதிகம் உணர்கிறார்கள். இதனால் வாழ்க்கைச் சுமையை தாங்க முடியாமல் அவர்கள் கிராமப் புறங்களுக்கு நகர்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கொழும்பில் உணவுப் பணவீக்கம் 70 வீதமாக அதிகரித்துள்ளது. சந்தையில் விறகுத் துண்டில் இருந்து சகல பொருட்களையும் கொள்வனவு செய்து கொழும்பில் வாழ்வது மிகவும் சிரமமாக உள்ளதாக வெளி மாகாணங்களுக்கு இடம்பெயர்ந்த மக்கள் தெரிவித்துள்ளனர். (நி)

# இராசிபலன்

17.10.2022
புரட்டாதி 30, திங்கட்கிழமை
சப்தமி முற்பகல் 9.21 மணிவரை
புனர்பூசம் பின்னிரவு 5.38 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
சந்திராஷ்டமம் - மூலம்

**வளவன்**

**மேஷம்** - செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், காரிய அனுகூலமுண்டு.

**ரிஷபம்** - வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** - நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் உருவாகும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**கடகம்** - காரிய அலைச்சல்களால் மனச்சோர்வு ஏற்படலாம், பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளும் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

**சிம்மம்** - அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள்.

**கன்னி** - திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**துலாம்** - விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பயணங்கள் கைகூடும்.

**விருச்சிகம்** - எதையும் யோசித்துச் செய்ய வேண்டிய நாள், பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, உடல் நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**தனுசு** - பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** - கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், உறவினர் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.

**கும்பம்** - பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**மீனம்** - உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

நட்பு ஒரு சுதந்திரப் பறவை அது விரும்புகின்ற இடத்தில் கூடு கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலப்பதிகாரம்


## கண்ணகி சபதம் நிறைவேறியது

இறந்துவிட்ட தன் கணவன் வருவான் என்று பரிபூரண நம்பிக்கையோடு இந்தப் பெண் நிற்கிறாளே இது உண்மையிலேயே நடக்குமா? அந்தப் பெண்ணின் கணவன் உண்மையிலேயே வருவாரா? அந்தப் பெண்களுக்கு ஆவல் மிகுதியானது அவர்களும் கண்ணகியோடு சேர்ந்து காத்திருந்தார்கள்.

கண்ணகியின் நம்பிக்கை பொய்த்துப் போகவில்லை அவளது எதிர்பார்ப்பு வீண் போகவில்லை அந்த மலைவாழ் பெண்கள் பார்த்துக் கொண்டிருந்த போதே இந்திராதி தேவர்கள் கோவலனை அழைத்துக் கொண்டு வான ஊர்தியில் வந்தார்கள்.

கற்பக மலர்களை மழையாகப் பொழிந்து கண்ணகியை ஆசிர்வதித்தார்கள்.

86



கண்ணகி ஊர்தியில் ஏறிக் கொண்டாள். தன் கணவன் கோவலனுடன் தேவலோகம் சென்றாள்.

கற்புள்ள மலை வாழ் மகளிர் ஆச்சரியத்தில் திகைத்தார்கள் கண்ணகியைக் கையெடுத்துக் கும்பிட்டார்கள்.

மாடலன் கதையைச் சொல்லி முடித்தான். மீண்டும் ஒரு பெரிய பெருமூச்சு விட்டான்.

அதற்குப் பின் நடந்தவற்றை மலைவாழ் மக்கள் எனக்கு எடுத்துச் சொன்னார்கள் என்றான் செங்குட்டுவன் தொடர்ந்து.

இத்தனை துன்பங்களைத் தனியாக எதிர்த்துப் போராடி தன் கணவனுக்கு ஏற்பட்ட களங்கத்தையும் துடைத்து எறிந்த கண்ணகி உண்மையிலேயே தெய்வமாகப் போற்றப்பட வேண்டியவள் தான். அவளுக்குக் கோயில் எழுப்புவதில் நான் மிகுந்த பெருமை அடைகிறேன் என்றான்.

மன்னா கஷ்டமோ நஷ்டமோ கடைசியில் கணவனைப் போய்ச் சேர்ந்துவிட்டாள் கண்ணகி. ஆனால் அவள் மீது பாசமும் மதிப்பும் வைத்திருந்தவர்கள்கதி பரிதாபத்திற்குரியது.

என்ன சொல்கிறாய் மாடலா?

ஆம் மன்னா அதையும் கேளுங்கள் என்று மாடலன் தொடர்ந்தன்.

**பிரியமானவர்களுக்கு என்ன நேர்ந்தது?**

என் தீவினை கங்கையில் நீராடிவிட்டுத் திரும்பும் போது புகார் நகரில் கண்ணகிக்கும் கோவலனுக்கும் நெருக்கமானவர்களுக்கு இந்தக் கொடிய செய்தியை என் வாயால் சொல்ல நேரிட்டது.

நடந்தவைகளைக் கேள்விப்பட்ட மாசாத்துவான் வாழ்வை வெறுத்துவிட்டார். துறவறம் மேற்கொண்டு விட்டார். அவர் மனைவி இறந்து போனார். கண்ணகியின் பெற்றோர் நிலையும் இதுவே தான்.

மாதவிக்கு என்ன ஆனது? அவள் துறவறத்தை மேற்கொண்டாள்.

(தொடரும்)



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 101


ஐரோப்பிய ஒன்றியத்துடன் உக்ரைன் ஒருங்கிணைவது அதன் ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பிற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பாக இருக்கும் என்று ஜனாதிபதி அலுவலகம் நம்புகிறது. ஜனாதிபதியின் கையெழுத்து நடைமுறையைத் தொடர்ந்து இனி அதை ஐரோப்பிய ஒன்றியம் பரிசீலனை செய்வதற்கான சிறப்பு நடைமுறைகள் மேற்கொள்ளப்படும்.

ரஷ்யாவும் உக்ரைனும் போர்நிறுத்த பேச்சுவார்த்தையை தொடங்கின.

பெலாரஸ், கோமலில் உக்ரைனிய மற்றும் ரஷ்ய பிரதிநிதிகளுக்கு இடையேயான பேச்சுக்கள் எந்த முன்னேற்றமும் இல்லாமல் முடிந்தது. இந்த பேச்சுவார்த்தையின் போது, போரை உடனடியாக நிறுத்திவிட்டு இராணுவத்தை வெளியேற்றும்படி ரஷ்யா தரப்புக்கு உக்ரைன் கோரிக்கை விடுத்தது. படையெடுப்பை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நிபந்தனையாக, புடின் உக்ரைனின் நடுநிலைமை, இராணுவமயமாக்கலை இல்லாதொழித்தல் மற்றும் கிரிமியாவை ரஷ்யப் பிரதேசமாக அங்கீகரிக்க வேண்டும் என்று கோரினார்.

**பெப்ரவரி 28, 2022 அன்று ரஷ்யாவும் உக்ரைனும் போர்நிறுத்த பேச்சுவார்த்தையை தொடங்கின. பெலாரஸ், கோமலில் உக்ரைனிய மற்றும் ரஷ்ய பிரதிநிதிகளுக்கு இடையேயான பேச்சுக்கள் எந்த முன்னேற்றமும் இல்லாமல் முடிந்தது.**

உக்ரைன் முதல்கட்டப் பேச்சு



யுக்ரேன் மற்றும் ரஷ்ய அதிகாரிகள் எதிரெதிரே ஒரே மேஜையில் அமர்ந்துள்ளனர்

ஐந்து மணி நேரம் நீடித்ததாக ரஷ்ய ஜனாதிபதி புடினின் உதவியாளரும் அந்நாட்டு தூதுக்குழு தலைவருமான விளாடிமிர் மெடின்ஸ்கி தெரிவித்தார். இரு நாடுகள் தரப்பில் எடுக்க வேண்டிய பொதுவான நிலைப்பாடுகள் குறித்த சில நடவடிக்கைகள் இந்த பேச்சுவார்த்தையின் போது கண்டறியப்பட்டதாகவும் அடுத்து வரும் நாட்களில் பேச்சுவார்த்தையைத் தொடர இரு தரப்பும் ஒப்புக் கொண்டதாக அவர் கூறினார்.

ரஷ்ய ரூபிள் 30 சதவிகிதம் [illegible] இது [illegible] மூலதனக் கட்டுப்பாடுகளை விதிக்க கட்டாயப்படுத்தியது. ரஷ்யாவின் மத்திய வங்கியுடனான பரிவர்த்தனைகளை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்கிறது மற்றும் உக்ரைனிய இராணுவத்திற்கு 500 மில்லியன் யூரோ ($554 மில்லியன்) ஆதரவுப் பொதியை அங்கீகரிக்கிறது. மூன்றாவது நாட்டிற்கு ஆபத்தான உபகரணங்களை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் ஒப்புக்கொண்டது இதுவே முதல் முறை ஆகும்.

**ரஷ்ய மத்திய இராணுவ மாவட்டத்தின் 41 ஆவது ஒருங்கிணைந்த ஆயுத இராணுவத்தின் துணைத் தளபதியான மேஜர் ஜெனரல் ஆண்ட்ரே சுகோவெட்ஸ்கி, உக்ரைனில் குறிப்பிடப் படாத சூழ்நிலையில் கொல்லப்பட்டார்.**

உலக அளவில் 36 நாடுகளின் விமான சேவைகளை ரஷ்யா தடை விதித்துள்ளது. பிரிட்டன், ஜேர்மனி, ஸ்பெயின், இத்தாலி, கனடா ஆகிய நாடுகளின் விமான சேவைகள் ரஷ்யாவின் தடை உத்தரவுக்கு இலக்காகியுள்ளன. உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைக்கு எதிர்வினையாற்றும் வகையில் தங்களுடைய உறுப்பு நாடுகளின் வான் பரப்பில் ரஷ்ய விமானங்கள் பறக்க தடை விதிக்க ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய்தது.

அது தொடர்பான அறிவிப்பு வெளிவந்த நிலையில், ரஷ்யாவும் தமது பங்குக்கு 36 நாடுகளின் விமான நிறுவனங்களுக்கு தடை விதித்துள்ளது.

முன்னதாக, ரஷ்யாவின் ஏரோஃப்ளோட் விமானங்கள் தமது நாட்டில் தரையிறங்க பிரிட்டன் தடை விதித்திருந்தது.

இதற்கு பதிலடியாக, பிரிட்டிஷ் ஏர்லைன்ஸ் நிறுவனத்திற்கும் ரஷ்யா தடை விதித்திருக்கிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 03



வந்தியத்தேவனுக்கு இது ஒன்றும் விளங்கவில்லை, இந்த வீரர்கள் யார்? பின்னால் வரும் பாய் விரித்த படகுகளில் யார் வருகிறார்கள்? எங்கிருந்து வருகிறார்கள்? ஒருவேளை அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பார்களோ?

ஏரிக்கரையில் கையிலே கோல் பிடித்து நின்ற பெரியவர் ஒருவரை வல்லவரையன் அணுகினான். "ஐயா! இந்த வீரர்கள் யாரைச் சேர்ந்தவர்கள்? அதோ பின்னால் வரும் அன்னக்கூட்டம் போன்ற ஓடங்கள் யாருடையவை? எதற்காக இவ்வீரர்கள் மக்களை விரட்டுகிறார்கள்? மக்களும் எதற்காக விரைகிறார்கள்?" என்று கேள்விகளை அடுக்கினான்.

"தம்பி! உனக்குத் தெரியவில்லையா, என்ன? அதோ அந்தப் படகுகளின் நடுப் படகில் ஒரு கொடி பறக்கிறதே! அதில் என்ன எழுதியிருக்கிறது, பார்!" என்றார் பெரியவர்.

"பனைமரம் போல் தோன்றுகிறது." பனைமரந்தான்! பனைமரக் கொடி பழுவேட்டரையர் கொடி என்று உனக்குத் தெரியாதா?"

"மகாவீரர் பழுவேட்டரையரா வருகிறார்?" என்று வந்தியத்தேவன் திடுக்கிட்ட குரலில் கேட்டான்

"அப்படிதான் இருக்க வேண்டும்; பனைமரக் கொடியை உயர்த்திக் கொண்டு வேறு யார் வரமுடியும்?" என்றார் பெரியவர்.

வல்லவரையனுடைய கண்கள் அளவிலா வியப்பினால் விரிந்து படகுகள் வந்த திசையை நோக்கின. பழுவேட்டரையரைப் பற்றி வல்லவரையன் எவ்வளவோ கேள்விப்பட்டிருந்தான். யார் தான் கேள்விப்படாமலிருக்க முடியும்? தெற்கே ஈழநாட்டியிருந்து வடக்கே கலிங்க நாடு வரையில் அண்ணன் தம்பிகளான பெரிய பழுவேட்டரையர், சின்னப் பழுவேட்டரையர் என்பவர்களுடைய பெயர்கள் பிரசித்தமாயிருந்தன.

உறையூருக்குப் பக்கத்தில் வட காவேரியின் வடகரையில் உள்ள பழுவூர் அவர்களுடைய நகரம் விஜயாலய சோழன் காலத்தியிருந்து பழுவேட்டரையர் குலம் வீரப் புகழ் பெற்றிருந்தது. அக்குடும்பத்தார் சோழ மன்னர் குடும்பத்துடன் கொள்வினை-கொடுப்பினை செய்து வந்தனர்.

இது காரணமாகவும் அவர்களுடைய குலத்தொன்மை, வீரப்புகழ் இவை காரணமாகவும் பழுவேட்டரையர் குலம் அரச குலத்தின் சிறப்புகள் எல்லாம் பெற்றிருந்தது. தனியாகக் கொடி போட்டுக் கொள்ளும் உரிமையும் அக் குலத்துக்கு உண்டு.

இப்போதுள்ள பழுவேட்டரையர் இருவரில் மூத்தவர் இருபத்து நான்கு போர்களில் ஈடுபட்டவர். அவருடைய காலத்தில் அவருக்கு இணையான வீரர் சோழ நாட்டில் யாருமில்லையென்று புகழ் பெற்றவர். இப்போது பிராயம் ஐம்பதுக்கு மேல் ஆகிவிட்டபடியால் அவர் போர்க்களங்களுக்கு நேரில் செல்வதில்லை. ஆனால் சோழ நாட்டு அரசாங்கத்தில் மிக உன்னதமான பல பதவிகளை வகித்து வந்தார்.

அவன் சோழ சாம்ராஜ்யத்தின் தனாதிகாரி; தான்யாதிகாரி; தனபண்டாரமும் தான்ய பண்டாரமும் அவருடைய அதிகாரத்தில் இருந்தன. அரசியலின் தேவைக்குத் தகுந்தபடி இறை விதித்து வசூலிக்கும் அதிகாரம் அவரிடம் இருந்தது. எந்த சிற்றரசையும் கோட்டத் தலைவரையும் பெரிய குடித்தனக்காரரையும் "இவ்வாண்டு இவ்வளவு இறை தர வேண்டும்?" என்று கட்டளையிட்டு வசூலிக்கும் உரிமை அவருக்கு இருந்தது. ஆகவே, சுந்தர சோழ மகாராஜாவுக்கு அடுத்தபடியாகச் சோழ சாம்ராஜ்யத்தில் இப்போது வலிமை மிக்கவர் பழுவேட்டரையர் தான்.

அத்தகைய மகா வீரரும் அளவிலா வலிமையும் அதிகாரமும் படைத்தவருமான, பெரிய பழுவேட்டரையரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் வந்தியத்தேவனுடைய உள்ளத்தில் பொங்கியது். ஆனால் அதே சமயத்தில், காஞ்சி நகரின் புதிய பொன் மாளிகையில் இளவரசர் ஆதித்த கரிகாலர் தன்னிடம் அந்தரங்கமாகச் சொன்ன செய்தி அவனுக்கு நினைவு வந்தது.

"வந்தியத்தேவா! நீ சுத்த வீரன் என்பதை நன்கு அறிவேன். அத்துடன் நீ நல்ல அறிவாளி என்று நம்பி இந்த மாபெரும் பொறுப்பை உன்னிடம் ஒப்புவிக்கிறேன். நான் கொடுத்த இரு ஓலைகளில் ஒன்றை என் தந்தை மகாராஜாவிடமும் இன்னொன்றை என் சகோதரி இளைய பிராட்டியிடமும் ஒப்புவிக்க வேண்டும்.

தஞ்சையில் இராஜ்யத்தின் பெரிய பெரிய அதிகாரிகளைப் பற்றிக் கூட ஏதேதோ கேள்விப்படுகிறேன். ஆகையால் நான் அனுப்பும் செய்தி யாருக்கும் தெரியக் கூடாது. எவ்வளவு முக்கியமானவராயிருந்தாலும் நீ என்னிடமிருந்து ஓலை கொண்டு போவது தெரியக்கூடாது. வழியில் யாருடனும் சண்டை பிடிக்கக்கூடாது. நீயாக வலுச் சண்டைக்குப் போகாமலிருந்தால் மட்டும் போதாது. மற்றவர்கள் வலுச் சண்டைக்கு இழுத்தாலும் நீ அகப்பட்டுக் கொள்ளக் கூடாது. உன்னுடைய வீரத்தை நான் நன்கறிவேன்.

எத்தனையோ தடவை நிரூபித்திருக்கிறாய், ஆகையால் வலிய வரும் சண்டையிலிருந்து விலகிக் கொண்டாலும் கௌரவக் குறைவு ஒன்றும் உனக்கு ஏற்பட்டு விடாது. முக்கியமாக, பழுவேட்டரையர்களிடமும் என் சிறிய தந்தை மதுராந்தகரிடமும் நீ மிக்க ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு நீ இன்னான் என்று கூடத் தெரியக்கூடாது! நீ எதற்காகப் போகிறாய் என்று அவர்களுக்குக் கண்டிப்பாய் தெரியக்கூடாது!"

சோழ சாம்ராஜ்யத்தின் பட்டத்துக்குரிய இளவரசரும் வடதிசைச் சைன்யத்தின் மகாதண்ட நாயகருமான ஆதித்த கரிகாலர் இவ்விதம் சொல்லியிருந்தார். மேலும் வந்தியத்தேவன் நடந்து கொள்ள வேண்டிய விதங்களைப் பற்றியும் படித்துப் படித்துக் கூறியிருந்தார். இவையெல்லாம் நினைவு வரவே, பழுவேட்டரையரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலை வல்லவரையன் அடக்கிக் கொண்டான்.

குதிரையைத் தட்டிவிட்டு வேகமாகச் செல்ல முயன்றான். என்ன தட்டி விட்டாலும் களைப்புற்றிருந்த அந்தக் குதிரை மெதுவாகவே சென்றது. இன்று இரவு கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் தங்கிவிட்டு நாளை காலையில் புறப்படும் போது வேறு நல்ல குதிரை சம்பாதித்துக் கொண்டே கிளம்ப வேண்டும் என்று மனதிற்குள் தீர்மானித்துக் கொண்டான்.

(தொடரும்...)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலப்பிட்டிக்கு மகிந்த விஜயம்

# எதிர்ப்பு போராட்டத்தில் எதிர்க்கட்சி

## போராட்டத்தில் ஈடுபட்ட பலர் கைது



(கொழும்பு)

அரசாங்கத்தின் பிரதான பங்காளியான ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியின் கூட்டத்தில் பங்கேற்பதற்காக முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று நாவலப்பிட்டிக்கு வருகை தந்த நிலையில், பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் எதிர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

நாளாந்தம் பொருட்களின் விலைகள் அதிகரித்து வருவதால், வாழ்க்கைச்சுமை தாங்க முடியாமல் மக்கள் பரிதவிப்பதாகவும் எனவே, பொருட்களின் விலைகளை உடனடியாக குறைக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியே இப்போராட்டம் இடம்பெற்றது.

போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு விரைந்த பொலிஸார் போராட்டத்துக்கு அனுமதி பெறப்படவில்லை எனவும் கலைந்து செல்லுமாறும் அறிவுறுத்தினர்.

எனினும், போராட்டக்காரர்கள் அடங்கவில்லை. இதனால் பொலிஸாருக்கும் போராட்டக்




காரர்களுக்கும் இடையே கடும் சொற்போர் மூண்டது.

இதனையடுத்து ஐக்கிய மக்கள் சக்தியின் நாவலப்பிட்டி தொகுதி அமைப்பாளரான சசங்க சம்பத் சஞ்சீவ உட்பட போராட்டத்தில் ஈடுபட்ட சிலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (நி)

# வன்முறைகளை அடக்க ஜனாதிபதியே சிறந்தவர்

## நாமல் புகழாரம்

(கொழும்பு)

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு மகிந்த ராஜ பக்ஷவிற்கு இயலுமை காணப்பட்டதை போன்று, வன்முறை களை முடிவுக்குக் கொண்டு வந்தமைக்கான இயலுமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் காணப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையிலேயே காலிமுகத்திடல் போராட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முடிவுக்குக் கொண்டு வந்ததாகவும் நாமல் தெரிவித்தார்.

இதேவேளை மனித உரிமைகள் தொடர்பில் பேசிக் கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்க தற்போது அவ்வாறு கூறுவது இல்லை என்றும் மேற்கத்தேய நாடுகளுக்கு ஆதரவு வழங்கினாலும் தற்போது அவர் அவ்வாறு செயற்படுவது இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலைய செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

திருத்தப் பணிகள் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தின் இரண்டாம் அலகு அடுத்த வாரம் தேசிய மின்கட்டமைப்பில் இணைக்கப்படவுள்ளதாக மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது மின்னுற்பத்திநிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் 78 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. இதன்படி 300 மெகாவோட் மின்சாரம் அடுத்த வாரம் தேசிய கட்டமைப்பில் இணைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தாமரைக் கோபுரத்தின் ஒரு மாத வருமானம் 90 மில்லியன் ரூபாவை தாண்டியது

(கொழும்பு)

தாமரைக் கோபுர முகாமைத்துவ நிறுவனம் இம்மாதம் 90 மில்லியன் ரூபாய் வருமானத்தை ஈட்டியுள்ளது.

தாமரைக் கோபுரத்தை பார்வையிடுவதற்கான நுழைவுச் சீட்டு விற்பனை மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் வசதிகளின் ஊடாக இந்த வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

கொழும்பு லோட்டஸ் டவர் பிரைவேட் லிமிடெட்டின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

தெற்காசியாவிலேயே மிக உயரமான கட்டடம் பொது மக்களுக்காக திறக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டு முதல் மாதத்திற்குள் சுமார் ஒரு இலட்சத்து 65 ஆயிரம் பேர் தாமரைக் கோபுரத்தை பார்வையிட்டுள்ளனர்.

தாமரைக் கோபுரம் கடந்த செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி பொதுமக்கள் பார்வைக்காக திறக்கப்பட்டது. கடந்த நான்கு வாரங்களில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் கோபுரத்தை பார்வையிட்டதாக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார். (நி)

VACANCY

PROJECT MANAGER

Key Requirements

- A Bachelor's degree in Business Administration / Business Management
- 5 years - significant experience in senior level project management and coordination.
- Ability to juggle a range of project types , complex business initiatives, change programs , monitor project progress, set deadlines , solve issues that arise and deliver high quality outcomes under pressure.
- Good understanding of performance management framework and tools in delivery of business objectives.
- Team management experience with the ability to manage and motive project teams.
- Well conversant in MS Office packages, Zoom and Microsoft Teams
- Excellent communication skills in English – both Written and spoken.
- Strong interpersonal , time management and problem-solving skills.
- Ensure stakeholder satisfaction.

If you feel you are the right individual for the above position, send us your updated CV through info@cciy.lk on or before 20-10-2022

(C-5099)

Chamber of Commerce and Industries of Yarlpanam
No.55, Kachcheri Nallur Road, Jaffna.
021 222 6608|09 info@cciy.lk www.cciy.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கஷ்டத்தை அனுபவிக்காமல் எந்தவொரு மனிதரும் அவரது இலட்சியத்தை அடைய முடியாது.

– காமராஜர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஹாபற் வீதிக்கு முன்னர் ஹாபற் வீதிக்கு பின்னர்

கிறிஸ்துவுக்கு முன் – கிறிஸ்துவுக்குப் பின் என்ற காலவரையறை உலக வரலாற்றுக் கணிப்பீட்டில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது.

இதுதவிர, குடியேற்ற நாடுகள் சுதந்திரத்துக்கு முன் சுதந்திரத்துக்குப் பின் என்ற வரையறைகளைப் பயன்படுத்துகின்ற நடைமுறையும் உண்டு.

இதையும் கடந்து விடுதலைப் போராட்ட கட்டங்களை மையப்படுத்தியும் யுத்தங்களைக் குறித்துரைத்தும் காலம் காட்டும் நடைமுறையும் உண்டு.

இந்தவகையில் நம் ஈழத் தமிழர்கள் ஈழ விடுதலைப் போராட்டங்களை முதன்மைப் படுத்தி காலத்தைச் சுட்டுவர்.

தற்போது வன்னிப் போருக்குப் பின்பும் முன்பும் என்ற பிரிபாடலும் நடைமுறையில் உண்டு.

இவை காலம் காட்டுவதற்கான குறித்துரைப்புகளாக இருந்தாலும் அதற்குள் இருக்கக்கூடிய மாற்றங்களும் இங்கு முதன்மை பெற்று நிற்பது கவனத்துக்குரியது.

அந்தவகையில் இப்போது எங்கள் வடபுலத்தில் ஹாபற் வீதி அமைக்கப்பட்டதன் பின்பாக மக்கள் அனுபவிக்கின்ற சாதக பாதகங்களை ஆராய்வதும் அது தொடர்பில் கலந்துரையாடுவதும் அவசியமாகின்றது.

அந்தவகையில் வடபகுதியில் ஹாபற் வீதிகள் உயரமாக அமைக்கப்பட்டதன் காரணமாக, வீடுகளுக்குள் வெள்ளம் வருகின்ற அனர்த்தத்தை மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்,

சாதாரண மழை பெய்தால்கூட, வீட்டு வளவுகளில் மழை நீர் தேங்கி விடுகிறது.

முன்பெல்லாம் இயற்கை அமைப்பின் அடிப்படையில் வீதியின் இரு மருங்காகவும் நீரோட்டம் இருந்தது.

ஆனால் வீதியையும் புகையிரதப் பாதையையும் கண்டபாட்டில் உயர்த்திவிட, மழை வெள்ளம் போகுமிடம் தெரியாமல் வீடுகளுக்குள் புகுந்துவிடுகிறது.

இந்தத் துன்பத்தில் இருந்து மக்கள் விடுபடுவது எப்போது என்று தெரியாதிருக்க, இன்னொரு பெரும் பிரச்சினைக்கு நம் விவசாயிகள் முகம் கொடுத்துள்ளனர்.

ஆம், ஹாபற் வீதி அமைக்கப்பட்ட இடங்களில் உள்ள வயல்களில் மழை வெள்ளம் சடுதியாகக் தேங்கிவிட, இனி அந்தப் பகுதியில் நெற்செய்கை செய்ய முடியாதென்ற அளவில் நிலைமை வந்துவிட்டது.

உண்மை. ஹாபற் வீதி ஊடறுத்துச் செல்லுகின்ற வயல்களில் மழை வெள்ளம் வழிந்தோடும் வழியின்றி அங்கேயே தேங்கிவிட, விதைத்த வயல்கள் நீரில் மூழ்கி முளையிலேயே நெற் பயிர்கள் இறந்துபோகின்றன.

இந்த அவலத்துக்கு உரிய தீர்வு எட்டப்படவில்லையாயின் பெரும்பாலான வயல்கள் வெறு நிலங்கள் என்ற தலைவிதியில் இருந்து தப்ப முடியாது.

# நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதில் அரசாங்கம் தொடர்ந்து அசமந்தம்

## அநுர குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதில் அரசாங்கம் தொடர்ந்தும் அசமந்த போக்கில் செயற்படுவதாக அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பிலியந்தலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், உலக வங்கி உரங்களை கொள்வனவு செய்ய உதவியளிக்கின்றது.

அது மட்டுமல்லாமல் குறித்த நிதி உதவி முறையாக செயல்படுகிறதா என்பதை ஆராய குழுவொன்றை இலங்கைக்கு அனுப்புகின்றது.

அவர்கள் காலத்தை கடத்துவதற்காகவே அரசாங்கத்தை பொறுப்பேற்றுள்ளனர். மகிந்த ராஜபக்ஷ களுத்துறையில் 'மீண்டும் எழுவோம்' என கோஷமிடுகிறார்.

ஆனால், அவர் எழுந்த வேகத்தை விட வீழ்ந்த வேகம் அதிகம்" என மேலும் தெரிவித்தார். (4-7)

# தவறைத் திருத்திக்கொள்ள முற்படாது முடங்கி இருப்பது தான் வெட்கம்

## முன்னாள் பிரதமர் மகிந்த

(கொழும்பு)

இலங்கையில்அமைதி நிலவுவதையும் இலங்கையர்கள் சுயமாக எழுவதையும் சகித்துக் கொள்ள முடியாத சிலர், கையேந்தும் நிலையையே விரும்புவதாக மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கட்சியின் நாவலப்பிட்டிய தொகுதி கூட்டத்தில் பேசிய அவர், இந்நிலைமை மாற வேண்டும் என்றும் அனைவரும் ஒன்றிணைந்து பொது வேலைத்திட்டத்தின்கீழ் பயணிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நாம் ஒரு நாடாக பல சவால்களை சந்தித்துள்ளோம். கொவிட் பிரச்சினையை எதிர்கொண்டு, மீண்டெழ முயற்சிக்கும்போது பொருளாதார சவால் ஏற்பட்டது.

அதனை எதிர்கொள்கையில் பிரச்சினைகளும் ஏற்பட்டன. மன்னர் காலத்தில் இருந்தே ஆக்கிரமிப்பு போன்ற சவால்களை, ஒன்றாக இருந்து எழுந்து எதிர்கொண்ட வரலாறு எமக்கு உள்ளது. இது தெரிந்தும், தெரியாதவர்கள் போல் சிலர் செயற்படுகின்றனர்.

சவால்களை ஏற்பதற்கு தைரியமின்றி, விமர்சனங்களை மட்டும் முன் வைத்துக்கொண்டு, சுமைகளை எம்மீது திணிக்கின்றனர். தவறுக்கு நாம் மட்டுமே பொறுப்பு என பந்தாடியும் எம்மை பந்தாடியும் வருகின்றனர்.

மறுபுறத்தில் சேறு பூசும் நடவடிக்கையும் இடம்பெறுகின்றது. தாங்கள் நல்லவர்கள் என காட்டிக்கொள்ள முற்படுபவர்களும் தவறுகளை இழைத்துள்ளனர். தவறு இடம்பெறுவது இயல்பு. அதனை ஏற்க வெட்கப்பட வேண்டியதில்லை. தவறை திருத்திக்கொள்ள முற்படாமல் முடங்கி இருப்பது தான் வெட்கம் என தெரிவித்தார். (4-7)

# காலநிலை மாற்றம் தொடர்பில் செயலகம்

## நிறுவவுள்ளது அரசாங்கம்

(கொழும்பு)

நாட்டில் காலநிலை மாற்றம் தொடர்பான செயலகத்தை நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கையும் தொடர்ந்து காலநிலை மாற்றத்தை எதிர்நோக்கும் நாடாக இருப்பதால், எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய காலநிலை அனர்த்தங்களை முகாமைத்துவம் செய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய இந்த அலுவலகம் நிறுவப்படவுள்ளது.

இலங்கையில் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவது மற்றும் காலநிலை மாற்றத்தை கையாள்வது தொடர்பிலான சட்ட மூலமொன்று எதிர்வரும் காலங்களில் பாராளுமன்றத்தில் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (4-7)

# எதிர்காலத்தை மாற்ற விவசாயிகளால் முடியும்

## பிரதமர் நம்பிக்கை

(கொழும்பு)

நாட்டின் பொருளாதார பயணத்தை நம்பகமான எதிர்காலமாக விவசாயிகளால் மாற்ற முடியும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

கிராமிய "பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் புத்தளம் மாவட்ட ஆரம்ப முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அரசியல் முரண்பாடுகளை உருவாக்குவதை விடுத்து தற்போதைய நெருக்கடிக்கு முகங்கொடுக்க அனைவரும் கைகோர்க்க வேண்டுமென பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (4-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** பாலாவி, பொன்னாவெளி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளம் ஆகிய இடங்களிலும் **யாழ். பிரதேசத்தில்** கட்டுடை, அரசடி, பிப்பிலி சந்தி மானிப்பாய் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் கைது

(கொழும்பு)

கொழும்பு ராஜகிரிய பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் நேற்று முன்தினம் சனிக்கிழமை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் ராஜகிரிய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது ராஜகிரிய பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் 42 வயதுடையவர் எனவும், அவர் மொரகஸ்முல்ல, ராஜகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது சந்தேக நபரிடமிருந்து 5 கிராம் 84 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் தோட்டாக்களும் மீட்கப்பட்டுள்ளன. (4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்கம்பம் உடைந்து விழுந்த நிலையில் மயிரிழையில் உயிர் தப்பிய ஊழியர்

(குருமன்காடு)

வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் உயர் அழுத்த மின் கம்பம் நிறுவப்பட்ட வேளை உடைந்து விழுந்தது. மின் கம்பத்தில் ஏறி நின்று வேலை செய்த ஊழியர் மயிரிழையில் உயிர் தப்பிய சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா, வேப்பங்குளம், 7 ஆம் ஒழுங்கையில் அதி உயர் மின்னழுத்த மின்கம்பங்கள் நிறுவும் நடவடிக்கை மின்சார சபையால் முன்னெடுக்கப்பட்டது. இதன் போது மின்கம்பம் ஒன்று உடைந்து விழுந்துள்ளது.



மின்கம்பம் உடைந்து விழுந்த போது குறித்த கம்பத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஊழியர் உயர் அழுத்த மின் கம்பத்தின் அருகில் இருந்த உயரக் கட்டடத்தில் குதித்து மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். (நி-250)

# தேர்தலை எதிர்கொள்ள பெரமுன தயார்

## மஹிந்தானந்த அளுத்கமகே

(கொழும்பு)

எந்நேரத்தில் வேண்டுமானாலும் தேர்தலை எதிர்கொள்வதற்கு பொதுஜன பெரமுன தயாராகவே உள்ளது என்றும் நாவலப்பிட்டிய தொகுதியிலும் வெற்றிக்கொடி பறக்கும் என்றும் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் ஏற்பாட்டில் பொதுஜன பெரமுனவின் நாவலப்பிட்டிய தொகுதி ஆசனக் கூட்டம் கட்சி தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 200 | 300 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 250 | 240 |
| தக்காளி | 330 | 250 | 300 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 220 | 220 | 200 |
| கோவா | 350 | 300 | 280 | 300 |
| கரட் | 250 | 370 | 380 | 450 |
| பூசணி | 200 | 160 | 180 | 200 |
| புடோல் | 200 | 200 | 140 | 200 |
| வாழைக்காய் | 180 | 140 | 120 | 160 |
| சின்ன வெங்காயம் | 500 | 400 | 200-600 | 520 |
| பெரிய வெங்காயம் | 260 | 240 | 230 | 250 |
| பாகற்காய் | 800 | 700 | 500 | 600 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 180 | 140 | 180 | 200 |
| பயற்றங்காய் | 400 | 450 | 350 | 350 |
| லீக்ஸ் | 280 | 280 | 280 | 350 |
| பீற்றூட் | 250 | 250 | 220 | 350 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 700 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 500 | 600 |
| போஞ்சி | 300 | 400 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | — | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 100 | 120 |
| தேசிக்காய் | 600 | 700 | 600 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 85 | 40-80 | 50-70 |
| இராசவள்ளி | 260 | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 480 | 350 | — | 450 |
| முள்ளங்கி | 160 | 200 | 140 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 100 | 40 | 50 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 120 |

# அநாவசியமான அரிசி இறக்குமதியால் உள்நாட்டு விற்பனையில் வீழ்ச்சி

(கொழும்பு)

தனிப்பட்ட இலாப நோக்கங்களுக்காக சில தரப்பினர் அரிசியை இறக்குமதி செய்வதாக ஐக்கிய அரிசி உற்பத்தியாளர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

பொலநறுவையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த அதன் தலைவர் முதித் பெரேரா , அரசாங்கத்தின் சில கொள்கைகள் காரணமாக அநாவசியமான முறையில் அரிசி இறக்குமதி செய்யப்படுவதாக குறிப்பிட்டார்.

சந்தையில், இறக்குமதி செய்யப்படும் அரிசி குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுவதனால், உள்நாட்டு அரிசி விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக நாடு முழுவதிலும் உள்ள சுமார் 750 அரிசி ஆலைகள் மூடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு எந்தவித கட்டுப்பாட்டு விலையும் அறிவிக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (நி)



கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டத்திற்கான பொலிஸ் அத்தியட்சகர் சமுத்திர ஜீவனால் நேற்றைய தினம் தருமபுரம் அ.த.க பாடசாலையில் கல்வி கற்கும் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வினாத்தாள்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

(படம்: தேவானந்தன்)

## வடமாகாண அதிபர்கள் சங்கம் வருடாந்தப் பொதுக் கூட்டம்

காலம் : 23.10.2022 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.30 மணி
இடம் : சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி (பஸ்நிலையம் முன்பாக)

**குறிப்புகள்**

1. பிரேரணைகள் சமர்பிக்க விரும்புவோர் 22ம் திகதிக்கு முன் செயலாளருக்கு அனுப்பி வைக்கவும்.
2. புதிதாக இணைய விரும்புவோர் அன்றைய தினம் சமுகமளித்து சந்தாவைச் செலுத்தி இணைந்துக் கொள்ளவும்

தலைவர்,
திரு.வே.த.ஜெயந்தன்
யா/வயாவிளான் மத்திய கல்லூரி,
வயாவிளான்.

செயலாளர்,
திரு.சி.[illegible]
யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி
புத்தூர்.


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: மூலம் 1
கி.பா: 30 சூரி 1 செவ் 5 இல்
உயரம்: 5' 8"
தகைமை/தொழில்: BBM (கணக்காளர்)
எதிர்பார்ப்பு: பட்டதாரி தொழில்புரியும் பெண்
தொ.இ: B/13047

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: மூலம் 1
கி.பா: சூரி 2 செவ் 12 இல்
உயரம்: 168 cm
தகைமை/தொழில்: BSc Engineer (தனியார்)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/13049

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: சித்திரை 1
கி.பா: சூரி 11 செவ் 2 இல்
உயரம் : 181 cm
தகைமை/தொழில்: BSc (விரிவுரையாளர்)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/13050

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மகம் 3
கி.பா: சூரி 4 செவ் 6 இல்
தகைமை/தொழில்: BSc (Hons)QS
எதிர்பார்ப்பு: பட்டதாரி உத்தியோகம் உள்நாடு மட்டும்
தொ.இ: B/13051

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: விசாகம் 2
கி.பா: சூரி 7 செவ் 9 இல்
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில்
தொ.இ: G/13035

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூசம் 4
கி.பா:14 சூரி, செவ் 10 இல்
உயரம்: 5' 3"
தகைமை/தொழில்: BA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரசதொழில் மட்டும்
தொ.இ: G/13036

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: மகம் 3
கி.பா: 60 சூரி 12 செவ் 1 இல்
உயரம் :5' 5"
தகைமை/தொழில்: BSc பட்டதாரி
எதிர்பார்ப்பு: உள்நாடு ஆயின் உத்தியோகம் வெளிநாடு ஆயின் கனடா, லண்டன்
தொ.இ: G/13037

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூசம் 4
கி.பா: சூரி 8 செவ் 10 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: ACCA கணக்காளர் லண்டன்
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: G/13041

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

படையினர் கைது செய்துள்ளனர்.

குறித்த கடற்றொழிலாளர்கள் 5 பேரை இந்திய கடற்படையினர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கைது செய்ததோடு, அவர்கள் மீன் பிடியில் ஈடுபட்ட படகு ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டது.

தூத்துக்குடி தருவைக்குளம் கடற்கரைக்கு அழைத்துச்செல்லப்பட்ட அவர்களிடம் கடலோர காவல் படையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-7)

## 10 ½ பவுண்...

டியைத் தாக்கி நகை மற்றும் பணம் ஆகியன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

அதிகாலை 3மணியளவில் வீட்டின் முன்பக்க கதவினை உடைத்து உள்நுழைந்த கொள்ளையன் தனிமையில் இருந்த மூதாட்டியை கன்னத்தில் தாக்கி விட்டு வீட்டில் இருந்த பத்தரைப் பவுண் நகை மற்றும் ஒரு இலட்சத்து 13,000 ரூபாய் பணம் ஆகியவற்றை கொள்ளையடித்துச் சென்றிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த கொள்ளைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-7,30)

## ஐஸ் போதை...

34 மற்றும் 42 வயதுடைய மூவரே கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து 2 கிராம் 70 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (4-7,33,104)

## 8 மாதக் குழந்தை...

சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

மரண விசாரணைகளை யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி ந. பிறேமகுமார் மேற்கொண்டுள்ளதோடு பிரேத பரிசோதனைக்காக சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (4-7,60)

## பாதிக்கப்பட்டோர்...

மசிங்க, அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்குத் தேவையான நிதி, நிதி அமைச்சின் ஊடாக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உணவு, மருந்து உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் துரிதமாக வழங்குமாறும், பாதிக்கப்பட்ட மக்களின் சுகாதார வசதிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறும் அதிகாரிகளுக்கு, ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

பலத்த காற்று, மண்சரிவு மற்றும் வெள்ளத்தினால் திருகோணமலை, ஹம்பாந்தோட்டை, காலி, கிளிநொச்சி, களுத்துறை, கம்பஹா, கொழும்பு, புத்தளம், இரத்தினபுரி, கண்டி மற்றும் கேகாலை ஆகிய 11 மாவட்டங்களைச் சேர்ந்த 52 பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள 15,404 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீரற்ற வானிலை இன்னும் இரண்டு நாட்களுக்கு தொடரும் எனவும், அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரணம் கிடைக்காவிடின் 117 என்ற அனர்த்த நிவாரண சேவையின் துரித இலக்கத்தை அழைக்குமாறும் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க வலியுறுத்தியுள்ளார். (4-7)

## போதை மாத்திரை...

திரைகளுடன் நேற்று கைது செய்யப்பட்டனர்.

கோப்பாய் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கோப்பாய் பொலிஸார் இந்த கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் இருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்த உள்ளதாக கோப்பாய் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4-7,104)

## வல்லைச் சந்தியி...

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்த வழிப்பறிக் கொள்ளைச் சம்பவத்தை மேற்கொண்டு விட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

உறவினர் ஒருவருடன் நவாலி பகுதியில் இருந்து புலோலி நோக்கிச் சென்று கொண்டிருந்த மூதாட்டியினை தாக்கி விழுத்தி, இந்த கொள்ளையர்கள் தாலியினை அபகரித்து சென்றுள்ளனர்.

காயம் அடைந்த மூதாட்டி அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக வல்லை பகுதியில் வழிப்பறி கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து செல்கின்றன.

கடந்த ஒரு வாரத்துக்குள் 4 வழிப்பறி கொள்ளை சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இராணுவத்தினர் வீதியில் இறங்கி இவ்வாறான வழிப்பறிக் கொள்ளை கட்டுப்படுத்த வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுகின்றனர். (4-7,60)

## வன்முறையில்...

றியலில் வைக்குமாறு பருத்தித்துறை பதில் நீதவான் முத்துக்குமார் உத்தரவிட்டுள்ளார்.

கரணவாய் செல்வாபுரம் பகுதியில் இரு தரப்பினருக்கு இடையே தொடர் மோதல் சம்பவம் இடம்பெற்று வந்தது.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய நெல்லியடிப் பொலிஸாரால் அப் பகுதியைச் சேர்ந்த சிலர் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து மோதல்கள் இடம்பெறுவதாக கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டை அடுத்து நெல்லியடி பொலிஸார் நேற்று முன்தினம் சனிக்கிழமை 13 பேரைக் கைது செய்து நேற்று ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதிபதி முன்றையில் முற்படுத்தினர்.

இதில் சிறுவர்கள் மூவர் இருப்பதால் அவர்களை விடுவித்த பதில் நீதிபதி ஏனைய 10 பேரையும் 14 நாள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (4-7,60)

## குடும்...

த. ததீஸ்வரன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் பிரேதப் பரிசோதனைக்காக யாழ். போதானா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (4-7)

## பிரத...

போது மக்கள் பொதுஜன பெரமுனவுடன் இருக்கின்றனர் என்ற திடமான நம்பிக்கையில் பொதுஜன பெரமுனவினரால் இந்த அரசியல் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. (4-7)

## வடக்...

லைக்கட்டுப்படுத்துவதற்கு சட்ட ஏற்பாடுகள் இருந்தும் கடற்படை அதனை நடைமுறைப்படுத்துவதில் தயக்கம் காட்டுவதாக தெரிவித்தார்.

பாரம்பரிய மீனவ மக்களின் வாழ்க்கையை பாதுகாக்கும் பொருட்டு கடற் படைக்கு அழுத்தம் கொடுக்குமாறு ஆளுநரிடம் கோரிக்கை முன்வைத்தார்.

யாழ். பருத்தித்தீவில் அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோத கடல் அட்டைப் பண்ணைக்கு ஆதரவாக அதிகாரிகள் செயற்படுவதாக தெரிவித்ததுடன் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரிகளைப் பணிக்குமாறு ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் ஆளுநர் கருத்து தெரிவிக்கையில் குறித்த விடயங்கள் தொடர்பில் துறை சார்ந்த அதிகாரிகளையும் மீனவப் பிரதிநிதிகளையும் அழைத்து பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடி முடிவு ஒன்றை எட்டுவதாக தெரிவித்தார்.

சுருக்கு வலை தொடர்பில் சட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விடயங்களை மீறி தொழில் செய்ய முடியாது என கூறியதுடன் மீனவ சங்கங்கள் எழுத்து மூலம் தந்தால் நீதிமன்ற நட வடிக்கைக்கு தான் தயாராக உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (4-7,104)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2022/10/16
சீட்டிழுப்பு இலக்கம் 4910
D 2 6 9 2 8 6
தேசிய லொத்தர் சபை

ஹந்தஹன HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.10.16
சீட்டிழுப்பு இலக்கம் 219
ரிஷபம் 11 17 18 37 ரிஷபம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 16/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1258
M 19 08 17 26 43

கொவிசெத
திகதி 2022.10.16
சீட்டிழுப்பு இலக்கம் 3152
M 19 43 64 71
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.10.16
சீட்டிழுப்பு இலக்கம் - 940
H 15 22 54 58
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 16/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1365
தனுசு 4 2 4 0 5 1
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1711
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2022.10.16
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,629,700/-
25 33 40 56 B

சனிதா Shanida
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.10.16
சீட்டிழுப்பு இல : 4046
வர்ணம் : இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,606,960/-
08 19 21 55 H

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,227,638.80
திகதி 2022-10-16
வெற்றி வாரம் 3597
16 35 42 48
கடகம் வர்ணம் ஊதா
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,971,420/-

வசனா சம்பத
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 13 10 20 22 47
சீட்டிழுப்பு வாரம் 1061
மகரன்.
2022.10.16 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 269,916,947.80
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1885 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.10.16 தினம் ஞாயிற்றுக்கிழமை
G 41 45 64 75
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 1,623,800/-

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 236
சீட்டிழுப்பு திகதி 2022.10.16 ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 10 39 44
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 1,755,320/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம்**

காலை 6.00 மணி முதல்
மாலை 6.00 மணிவரை

**தரகர் தேவையில்லை**

தொடர்புகளுக்கு - ஜெயம்

(13141)

**077 814 7389, 077 986 5457**

அன்பான வாடிக்கையாளருக்கு

மகிழ்ச்சியான செய்தி

# கொழும்பு விலையில் யாழ். நகரில்

உங்களுக்குத் தேவையான அனைத்து வகையான பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சில வருட காலமாக இயங்கிவரும் ஸ்தாபனத்தில் இன்றுமுதல் விசேட விலைக்கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.

பான்ஸிப் பொருட்கள், சில்வர் பொருட்கள், பை (Bag) வகைகள், கிளாஸ் வகைகள், மாபிள் வகைகள், பிளாஸ்ரிக் பொருட்கள், பாதணி வகைகள், முகக் கவசங்கள் (Mask), அன்பளிப்புப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், மணிக்கூடுகள், குடை, மழைக்கவசங்கள், தையல் உபகரணங்கள், பாடசாலைப் பொருட்கள், கவரிங் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள்

மொத்தக் கொள்வனவிற்கு 10% கழிவு

**சரவணபவன் பான்ஸி ஹவுஸ்**

இல. 26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன்,
(செம்மா தெரு ஒழுங்கை)
யாழ்ப்பாணம்.

(13106)

உரிமையாளர் - தே. கலைத்தாசன் (கரன்)

**021 315 5900, 077 468 3354**

**வலம்புரி** 021 221 7603, 076 097 3127
விளம்பரத் தொடர்புகளுக்கு

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13137)

**076 825 7716 (ஆகாஸ்)**

## வீடு வாடகைக்கு உண்டு

இல. 89 முருகமூர்த்தி வீதி வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அழகிய புதிய வீடு வாடகைக்கு உண்டு.

கீழ்த்தளம் : 3 அறை, கோல், சமையலறை, வாகனத் தரிப்பிடம் மலசலகூடம் (Attach)

1 ஆம் தளம் : 5 அறை, 2 கோல், மலசலகூடம் (Attach) (உள்வெளி ஏறு படி)

அரச உத்தியோகத்தர், நிறுவனங்கள் விரும்பத்தக்கது. அதிகூடிய வாகனத் தரிப்பிடம்.

(13145)

**074 373 0894, 077 388 4719**

## பெண் பணியாளர் தேவை

அச்சுவேலி பிரதேச எல்லைக்குள் வீட்டில் தங்கி நின்று வயோதிப பெண்ணை பாரமரிப்பதற்கு நற்பண்பும் தேகாரோக்கியமும் உள்ள பெண் பணியாளர் தேவை.

(13136)

**074 049 1582**

**அமெரிக்க லொத்தர் இலவச விசா**

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

Passport அவசியமில்லை

55'000 விசா

இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்புக்கள்

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்

ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்

ஒரே ஒரு அரியசந்தர்ப்பம்

V2 Travels and Tours Facebook (C-4921)

**V2 Travels 0768226240 0768226244**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தில் 33 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- ஒட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன் (காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டது.
- 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்.பஸ் நிலையத்திலிருந்து 1½km தூரம்.
- பார்வையிடும் நேரம் :- காலை 6.00 - மாலை 6.00

(13108)

தொடர்பு

**077 911 6983**
**076 755 8606**

**யாழ்ப்பாணம் தாவடி சந்திக்கு அருகாமையில் 2 பரப்பு காணி விற்பனைக்கு**

- K.K.S வீதியில் இருந்து இரண்டாவது காணி
- பார்வையிடும் நேரம்:- காலை 9.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு

**077 623 4204**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.